# டிசம்பர் – 08 – சனி

## அன்னை மரியாவின் அமல உற்பவம்

### “அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” லூக்.1:28

---

## முதல் வாசகம் : தொடக்க நூல் 3 : 9 – 15, 20

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு ”நீ எங்கே இருக்கின்றாய்?” என்று கேட்டார். ”உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால்இ எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில்இ நான் ஆடையின்றி இருந்தேன். எனவே நான் ஒளிந்து கொண்டேன்” என்றான் மனிதன். ”நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?” என்று கேட்டார். அப்பொழுது அவன் ”என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண்இ மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நானும் உண்டேன்” என்றான். ஆண்டவராகிய கடவுள் ”நீ ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று பெண்ணைக் கேட்கஇ அதற்குப் பெண் ”பாம்பு என்னை ஏமாற்றியது நானும் உண்டேன்” என்றாள். ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம் ”நீ இவ்வாறு செய்ததால் கால்நடைகள் காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய். உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்” என்றார். மனிதன் தன் மனைவிக்கு ”ஏவாள்” என்று பெயரிட்டாள் ஏனெனில் உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்

## இரண்டாம் வாசகம் : எபேசியர் 1 : 3 – 6, 11 – 12

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளு மானவர் போற்றி! அவர் விண்ணகம் சார்ந்த, ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம்மீது பொழிந்துள்ளார். நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம்திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்துவைத்தார். இதுவே அவரது விருப்பம் இதுவே அவரது திருவுளம். இவ்வாறு தம் அன்பார்ந்த மகன் வழியாக நம்மீது ஒப்புயர்வற்ற அருளைப் பொழிந்தருளியதால் அவரது புகழைப் பாடுகிறோம். கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின்படி அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப் பேற்றுக்கு உரியவரானோம். இவ்வாறு கிறிஸ்துவின்மேல் முதலில் நம்பிக்கை வைத்த நாங்கள் கடவுளுடைய மாட்சியைப் புகழ்ந்து பாடவேண்டுமென அவர் விரும்பினார்.

## நற்செய்தி : லூக்கா 1 : 26 - 38

அக்காலத்தில் ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, ”அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, ”மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், ”இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்றார். வானதூதர் அவரிடம், ”தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம்.
ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்றார். பின்னர் மரியா, ”நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** பாவம் பெருகிய இடத்தில் கடவுளின் அருள் பொங்கி வழிந்தது (உரோ.5:20). எந்தப் பெண்ணினத்தை பாவம் நுழைவதற்கு வாய்க்காலாக சாத்தான் பயன்படுத்தியதோ அதே பெண்ணினத்தைப் பயன்படுத்தி கடவுள் தனது மீட்புத்திட்டத்தை நிறைவேற்றி முடித்தார். எது எது பலவீனம் என்று உலகம் கருதியதோ, எவை எவை உலகத்தின் பார்வையில் மடமை என்று கருதப்பட்டதோ அதைக் கடவுள் தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வலிமையான ஆயுதங்களாக உருவாக்கினார். “கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றைத் தோந்து கொண்டார். அவ்வாறே வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார். உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்துவிட, அது தாழ்ந்ததாக கருதுபவற்றையும் இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார்” (1கொரி.1:27-28). உலகத்தினரால் ஒதுக்கித் தள்ளப்பட்ட கல் இன்று கட்டிடம் தாங்கிடும் மூலைக்கல்லாக மாறியது. இது கடவுளின் செயல் நமது புறக்கண்களுக்கு அது வியப்பாக இருக்கிறது (திபா.118:22-23). கடவுளின் மாட்சியின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் விளங்கும் (எபி.1:3). இயேசு கிறிஸ்துவின்மேல் கொண்ட நம்பிக்கையால் அனைவரும் நிலைவாழ்வு பெரும்பொருட்டு இந்த உலகத்திற்கு அனுப்பத் திருவுளம் கொண்ட கடவுள் (யோவா.3:15-16) தனது மகனுக்காகத் தயார் செய்த வாக்குத்தத்தத்தின் பரிசுத்த பெட்டகம்தான் அன்னை மரியாள். மாசுமறுவற்ற தனது மகனைக் கருக்கொள்வதற்காக அன்னை மரியாளை ஜென்ம பாவத்திலிருந்து விடுவித்து தூய்மையான இறைவன் தங்கும் ஆலயமாக உருவாக்கினார். இறைவனுக்கே தாயாக உயர்த்தப்பட்ட மரியாளை கடவுள் அவரது சிறப்பு பேறுபலன்களால் அணி செய்தார். அன்னை மரியாளை மாசுமறுவற்றவராக, இறைவனின் அருளை நிரம்பப் பெற்றவராக, பெண்களுக்குள் பேறுபெற்றவராக, அவரை ஏற்பாடுசெய்தார். காலங்களுக்கு முன்பே முன்குறிக்கப்பட்ட அன்னை மரியாளை இறைவன் கருவிலேயே ஜென்மப் பாவம் அனுகாமல், கறையில்லாமல் தற்காத்துக் கொண்டார். கடவுளின் அருள் நம்மை அனைத்துவிதமான பாவக்கறைகளிலிருந்து மீட்க வல்லது. நாம் வலுவற்றவர்களாக உணரும்போது தேவனின் பலம் நம்மை நிறைவாக மாற்றுகின்றது. வலுவின்மையில்தான் கடவுளின் வல்லமை நிறைவாய் வெளிப்படும். நாம் வலுவற்றவர்களாக இருக்கும்போது வல்லமை பெற்றவர்களாக மாறுகின்றோம் ஏனெனில் கடவுளின் அருள் நமக்குப் போதுமானது (2கொரி.12:910) என்பதை உணர்ந்து கொள்வோம். கடவுளின் கரங்களால் உருவாக்கப்பட்ட அன்னையின் புகழ் சாற்றுவோம்.